உ

சிவமயம்.

தஞ்சைப் பெருவுடையார் மாலை.

மகாமகோபாத்தியாய டாக்டர்

வே. சாமிநாதையர் அவர்கள்

மாணாக்கருள் ஒருவரும், முன்னைப் பால பாடசாலைப்
பரிசோதகருமான திராவிட கவிமணி

வே. முத்துஸாமி ஐயர் எம். ஏ., எல். டி.

அவர்களின் மைந்தனும் மாணாக்கனும்,

காந்தி அடிகள் பிள்ளைத்தமிழ்,
அப்பர் சுவாமிகள் பிள்ளைத்தமிழ்,

இவற்றின் ஆசிரியருமாகிய

மு. கோ. இராமன் இயற்றியது

இதன் பதிப்புரிமை யாவர்க்கும் உரியது.

வெற்றிவேல் பவர் பிரஸ், தஞ்சாவூர்.
1949.

இலவச வெளியீடு.

இவ்வாசிரியர் இயற்றிய

காந்தியடிகள் பிள்ளைத்தமிழ்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின், தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் A. சிதம்பரநாத செட்டியார் M. A., Ph. D. அவர்கள் தலைமையில் அரங்கேறியது; பல அறிஞர்களாற் பாராட்டுப் பெற்றது.

1. **கவிமணி** S தேசிகவிநாயகம் பிள்ளை:- பாக்கள் யார்க்கும் பொருள் விளங்கும் இனிய எளிய நடையில் அழகாய் அமைந்துள.

2. **தேசியக்கவி** நாமக்கல் V. இராமலிங்கம் பிள்ளை :- காந்தியாரைப்பற்றிய பாக்கள் வந்தன; பாட்டுகள் நன்றாக இருக்கின்றன. தங்கள் குமாரருக்கு என் வாழ்த்துக்கள்.

3. **சென்னை வித்வான்** T.P மீனாக்ஷிசுந்தரனார் M.A.B.L. M.O.L.- காந்தியாரை இழந்து வருந்தும் தமிழருக்கு இஃது ஆறுதலளித்து உள்ளொளி பெருக்கும். பிரபந்தங்கள் வேண்டா என்பவர் வாயடைப்பதுபோல இது வந்துளது.

4. **மதுரைத் தமிழ்சங்கக் காரியதரிசி** N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார் B.A., B.L.,- பாக்கள் எல்லாம் சொல்லும் பொருளும் இனிதமைந்து மனோதர்மங்களும் உயர்ந்து விளங்குகின்றன...எல்லாவற்றிலும் மேலாகச் சிறுதேருருட்டும் சிறப்பு அமைந்துள்ளது. சிறுபறைக்கவியும் கஸ்தூரி மணமே கமழ்கிறது.

5. **சென்னை** அரசாங்கக் காலேஜ், தமிழ்ப் பேராசிரியர், **வித்வான்** R. விசுவநாத ஐயர் M. A. B O. L:- இதன் எளிய நடையும், ஓசை நலமும் கருத்துச் செறிவும் பாராட்டற்குரியன.

6. **காரைக்கர்**, டாக்டர் அழகப்பர் காலேஜ். தமிழ்ப்பேராசிரியர், ஆ. முத்துசிவனார் M. A:- பழைய ஜாடியில் புதுமது வார்த்துக் கொடுப்பார் அருகிவரும் இக்காலத்தில், தமிழ்க்காதல் தந்த துணிவுடன் இக்கவிகளை யாத்துத் தந்தது பழமைக்குப் பெருமையும் புதுமைக்குக் கவர்ச்சியும் தருகிறது.

7. **சென்னை**, தணிகைமணி இராவ்பகதூர் V.S. செங்கல்வராய பிள்ளை M. A.- ஒவ்வொரு பாடலும் பருவங்களுக்கு ஒத்த கருத்துடன் பிள்ளைத்தமிழில் இலகுவது இன்புறற்பாலது

8. **கோவை**, சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் B. A.- வாக்குவளம் நன்றாகவும் செம்பாகமாகவும் இருக்கிறது.

(தொடர்ச்சி பின் அட்டை உட்புறம்)

உ

சிவமயம்.

638

மகாமகோபாத்யாய டாக்டர் வே. சாமிநாதையர் அவர்கள்
மாணாக்கருள் ஒருவரும், முன்னைப் பால பாடசாலைப்
பரிசோதகருமான திராவிட கவிமணி

வே. முத்துஸாமி ஐயர் எம். ஏ., எல். டி., அவர்களின்
மைந்தனும் மாணாக்கனும், காந்தி அடிகள்
பிள்ளைத்தமிழ், அப்பர் சுவாமிகள் பிள்ளைத்தமிழ்,
இவற்றின் ஆசிரியருமாகிய

மு. கோ. இராமன் இயற்றியது.

இதன் பதிப்புரிமை யார்க்கும் உரியது.

வெற்றிவேல் பவர் பிரஸ், தஞ்சாவூர்.

1949.

உ

சிறப்புப்பாயிரம்.

புதுக்கோட்டை அரசர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் பிர்மஸ்ரீ **கவிராஜபண்டிதர் N. கனகராஜ ஐயர் B.O.L.:—**

பிறவிகள் பலமுன் பிறந்துநன் றியற்றும்
பெருந்தவப் பயனெனத் தமிழின்
பெருமையை உணரும் பிறப்பினைப் படைத்துப்
பெருந்தகைப் புலவர்தங் கவிதை
உறுநலம் கனியும் சுவைநயந் துவக்கும்
உள்ளமே பொருந்திய ஒருவன்
உயர்வற உயர்ந்த தமிழ்ப்பெரும் புலவர்
உவந்தமெய்த் தமிழமா ணவகன்
அறமலி அரங்க நாதமா புரத்தில்
அந்தணர் குலமுத்து **ஸாமி**
ஐயனும் புலவன் பெறும்சிறு மதலை
அருட்கவி **கோதண்ட ராமன்**
பெறலருந் தனிச்சீர் பிறங்கெழிற் றஞ்சைப்
பெருவுடை யவர்க்கொரு மாலை
பெருகுமன் பொழுகத் தமிழ்மணங் கமழப்
பிணைத்தனன் புலவர்போற் றறவே.

2. சென்னை, தணிகைமணி, இராவ்பகதூர் உயர்திரு. **V. S. செங்கல்வராய பிள்ளை M. A.:—**

தஞ்சைவா ழரனார் பெருவுடை யார்தம்
தாண்மலர் நெகிழ்ந்திடா வண்ணம்
நெஞ்சினி விருத்திச் செந்தமிழ்ப் பாக்கள்
நேயமோ டுரைத்தனன் தமிழ்நூல்
செஞ்சவே கற்ற திருவளர் செல்வன்
சிவநிறை **முத்துஸா மிப்பேர்**
அஞ்சொலான் அறிஞன் அளித்த **கோதண்ட**
ராமநா மக்கவி அரசே.

3. ஆசிரியர் தந்தையார் திராவிடக் கவிமணி பிர்மஸ்ரீ **வே. முத்துஸாமி ஐயர்** எம். ஏ., எல். டி.:—

மூதண்ட கோளமெல்லாம் மொய்ம்புற அருளிற் காக்கும்
தீதண்ட இல்லாத் தஞ்சைத் திருப்பெரு வுடையார் பாத
மீதண்டு தமிழ்ப்பா மாலை வேய்ந்தனன் விழைந்தென் மைந்தன்
கோதண்ட ராம நாமக் குண மிகு சீடன் ஆய்ந்தே.

ஈரமேயன்
மீதன் ;
ந்தி

உ

முன்னுரை.

இந்நூல் I இராஜராஜ சோழனால் கட்டப்பெற்றவாய்; இராஜேசுவரம் என்னும் தஞ்சைப் பெரியகோவிலில் வீப்பா பெருவுடையார்மீது 30 துதிப் பாக்கொண்டது. னுக்கு 11—2—49இல் (தை வெள்ளி வாரம்) தஞ்சை ற பதிப்பகத்தார் நடத்திய சந்தனக்காப்பு விழாவில் அரங்ம..,). அப்போது புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் தமிழ்ப்போராசியர் கவிராஜபண்டிதர் பிரம்மஸ்ரீ N. கனகராஜஐயர் B.O.L., அவர்கள் தலைமைதாங்கினர். இக்கவிகளை 15–10–48இல் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் கேட்டருளினார்கள். இச்சிறு நூலை அன்னார் திருவடிகளில் அர்ப்பிக்கின்றேன்.

காலையிளம் பரிதியெனக் கருத்திலக இருள்தீர்த்து
வேலையமு தெனஅருளும் விமலசங் கரகுருவே!
பாலைமகிழ் பெருவுடையார் பால்அன்பாற் பாலன்என்பா
மாலை யிதை யேற்றருளி வளர் கருணை வழங்குகவே.

2. இப் பெரியகோவில் அற்புதச் சிற்பநலம் பூண்டது. இதன் ஒவ்வொரு உறுப்பின் அமைப்பும் அழகும் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றன. கோவிலின் பரப்பும் கோபுரத்தின் உயர்வும் மூர்த்திகளின் எழிலும் பொலிவும் இணையற்றன. இக்கோயில், 1000 ஆண்டு கண்டதாயினும், இன்று தான் கண்டதோ என, அத்தனை திட்ப நுட்ப ஒட்பமுள்ளது.

3. சைவத் திருமுறையில் இத்தலம் கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பாப் பெற்றது. கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் என்னும் பெரும் புலவரால் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஒரு அரிய உலாவும் பெற்றுளது.

4. இதனை அர்ப்பணம் ஏற்ற அடிகளுக்கும், எளியேனைத் தமிழ்த்துறையில் ஆற்றுப்படுத்த எந்தையாருக்கும் சிறியேன் பெருவணக்கம் கூறுகின்றேன். யாயிரம் அளித்த பெரியோர்களுக்கும் நன்றி பகர்கின்றேன். இதனை அச்சேற்றியும் அரங்கேற்றியும் உதவிய தஞ்சை வெற்றிவேற் பதிப்பகத்தார்க்கும் என் நன்றி உரியதாகும்.

5. பெருவுடையார் திருவருள் பேருலகெங்கும் பெருகுக.

அரங்காதபுரம், 11—2—49. } ...னம்,

ள கோவில்; [2] வைபபு—சேமநிதி.

சப் பெருவுடையார் மாலை.

புதுக்கோ[illegible]பு: விநாயகர் துதி ; நேரிசை வெண்பா.
பிர்மஸ்ரீ [illegible]

[illegible]தஞ்சைப் பெருவுடையார்க் கன்பிஞற்
[illegible]மாலை செப்பவே—ஏராரும்
செ[illegible]னபதிதாள் சென்னிமிசைச் சேர்க்கின்றேன்
நல்[illegible] தக்கமே நயந்து.

அவையடக்கம் ; கலி விருத்தம்.

கங்கைவெண் பிறைமுடி சூடுங் கண்ணுதல்
அங்குபுல் எருக்கரா அணிதல் காண்டலாற்
பொங்குசீ ரான்றவர் புகழ்ந்த பாக்களோ (டு)
இங்கெளி யேனிவை இயம்ப லாயினேன்

குருவணக்கம் ; வஞ்சி விருத்தம்.

மைந்தன் இந்நூல் வளமுற, கந்தம் வீசு கவிமணி
எந்தை பாத இணைமலர், சிந்தை யன்பு செய்வெனே.

நூல் ; ஏழுசீர் விருத்தம்.

I. இருவுடை யவனே* வேதனே* மற்றைத்
தேவரே* தேடியு மறியா
உருவுடையவனே ! ஒப்பிலா மணியே !
உத்தமர் உளத்தினிற் றிகழும்
அருவுடையவனே! அருமறை யந்தத் (து)
அணிதிகழ் ஆதியே ! கரித்தோற்
பெருவுடையவனே! பெருவளத் தஞ்சைப்
பிறங்கு சீர்ப் பெருவுடை யவனே.*

2. காசு சேராசை கருத்துமிக் குறவே
கங்கை வார் சடையிடை முடிக்கும்
ஈசனே! நின்னைச் சிந்தையில் மொழியில்
செயலினிற் சிந்தியா திருந்தேன் ;
நீசனேன் நாயேன் நினைப்பதொன் றில்லேன் ;
நின்னையே நினைத்திடு வண்ணம்
ஈசனே ! [illegible]இணை வழங்குதி தஞ்சை
மீதம[illegible] [illegible]ப்பா மாரி[illegible] பெருவுடை யவனே !

கோதண்ட-ராம நாமக் குண ம[illegible]
[illegible]பொருளது.

3. கூறியென நின்னைக் கண்ணுதால்! நாயேன்
கணமுமென் கருத்தினிற் கருதேன்;
விதியினால் நொந்து வெம்பவத் தழுந்தி
வீழ்கின்றேன்; விரைவினி லருள்வாய்;
நிதியறு மன்பர்க் கெய்ப்பினில் [2]வைப்பா
நீடருள் மழைபொழி கங்கை
மதியுடைச் சடையாய்! மணிகிளர் தஞ்சை
மாநகர்ப் பெருவுடை யவனே!

4. பெண்ணொரு பாக முடையனே! சோதி!
பிஞ்ஞகா! பிறப்பிலீ! நின்னை
நண்ணுதற் கான நல்வழி யறியேன்
நாதனே! நலமுடன் நால்வர்
பண்ணுறப் பாடும் பாப்பல வுடையாய்!
பாம்பினை யரைக்கசைத் துவக்கும்
அண்ணலே! அடியேற் கருளுக; தஞ்சை
ஆதியே! பெருவுடை யவனே!

5. உருளுடைச் சகடம் போன்றதாம் பிறப்பில்
உருண்டுருண் டுழல்கின்றேன் நாயேன்;
மருளுடை மனத்து மாசுசேர் வாழ்வு
மதிக்குமிவ் வெளியனைக் கண்டம்
இருளுடை யரனே! ஒளிமய மான
ஈசனே! தேசனே! உள்ளத் (து)
அருளொடும் ஆள்வாய் அடியனைத் தஞ்சை
அமர்ந்துளாய்! பெருவுடை யவனே!

6. *கருத்தனே வுலக காரண! நின்சீர்
கனவினு நினைத்திடற் கறியேன்;
திருத்தனே! மன்றுள்; நிலவுதண் கருணை
நிமலனே! நேயமோங் கன்பர்
[1]கருத்தனே! மழுவுங் கனலுங்கை ஏந்தீ!
காடுசார் வெண்பொடி பூசும்
[2]திருத்தனே! சிறியேற் கருளுக; தஞ்சைத்
திரு நகர்ப் பெருவுடை யவனே!

* எழில்தளி—எழுச்சியுள்ள கோவில்; [2]வைப்பு—சேமநிதி.

7. சங்கரா! சம்பு! சத்தியோர் பாக!
சதாசிவ! சச்சிதா னந்த!
அங்கண! உலகம் எங்கணு முடையாய்!
அரிபிர மாதியர் முதலோர்
இங்கடி பணிந்துன் ஏவலில் நிற்ப
இன்னருள் புரிதல்போல் மயலே
பொங்கெளி யேனைப் புரந்தருள்; தஞ்சைப்
புராரியே! பெருவுடை யவனே!

8. முத்துநேர் முறுவற் பவளவாய்க் கருங்கண்
மொய்குழல் மாதர்பால் வீழும்
சித்தமே யுடையேன் செய்வதொன் றறியேன்
சீலமு ஞானமு மில்லேன்
பித்தனேன் பேயேன் பிழைபுரி நாயேன்
பேதையேன் பிணழுக்கிடு வண்ணம்
அத்தனே! பொழிவாய் அருள்மழை; தஞ்சை
அணிநகர்ப் பெருவுடை யவனே!

9. தனிப்பெருங் கருணே! அருட் பெருஞ்சோதி!
தாண்டவ மாடிட வல்லாய்!
பணிப்பொருப் பரையன் பாவையை வாம
பாகத்தி னினிதுறக் கொண்டாய்!
இனிப் பிறவாத இருங்கதி நாயேன்
எய்திடச் செய்திடின் இதனின்
இனிப்புறும் பேறு வேறெதோ? தஞ்சை
இலங்கருட் பெருவுடை யவனே!

10. நெஞ்சமொன் றெண்ண வாய்கரம் பிறிதாம்
நீசனும் மாசினேன் றனேநீ
அஞ்சலென் றன்பால் ஆதரித் தருள்வாய்;
அம்மையில் அப்பனில் மிக்காய்!
எஞ்சலில் [1] திசைகள் எலாம்பெரு வுடையாய்!
இணையிலாக் கோபுர எழிலார்
தஞ்சையம் பதியில் விஞ்சையந் தளியிற்
சார்திருப் பெருவுடை யவனே!

---

* கர்த்தா; 1 கருத்திலிருப்பவன்; 2 திருத்தமுடையவன்;
தீர்த்தனுமாம்.

11. இந்துவாழ் சடையாய்! திரிதலைப் படையாய்!
ஏற்றுயர் கொடியினை யுடையாய்!
[2]கந்து போரானைக் களிற்றுரி யுடையாய்!
கவுரியை யிடத்தினி துடையாய்!
[3]வந்துநீர் தீமண் விண்ணுரு வுடையாய்!
மைதிகழ் கண்டமே லுடையாய்!
எந்தையே! எளியே னுய்யு மாறருள்வாய்;
எழிற்றஞ்சைப் பெருவுடை யவனே!

12. யானெனு மகந்தை என்மன மகல
இற்றைநா ளுனைநினைக் ககிலேன்;
மானெனும் விழியாள் கூறுளாய்! என்னுள்
மலிதரு மையலைத் தவிர்த்தே
நானெனும் பொருளும் நீஎனும் பொருளும்
நவையற ஒன்றென உணர்த்தி
ஊனெனும் உடல்மேற் காதல் தீர்த்தருள்வாய்;
உயர் தஞ்சைப் பெருவுடை யவனே!

13. ஆதியு நீயே; அருமறை நான்கின்
அந்தமும் அருத்தமும் நீயே;
சோதியு நீயே; சுடரொளி நீயே;
தூயவர் சொற்பொருள் நீயே;
நீதியு நீயே; நிலைப்பொருள் நீயே;
நின்பதம் எனக்குறு கதியே;
மாதிடம் அமரும் பாதியே! தஞ்சை
மணிமுதற் பெருவுடை யவனே!

14. ஆசுசித் திரமே யாதிநாற் கவியால்
அருட்டிறம் பாடினேன் நாயேன்;
மாசுமிக் கோங்கும் மாதரார் மண்பொன்
மையல்தீர்ந் துய்யுமா றருள்வாய்;
[1]தூசெனப் புலித்தோ லரைக்கணி ஐய!
தூயவ! தொன்மறை யாதி!
தேசுமிக் கோங்கும் இஞ்சிசூழ் தஞ்சைத்
திருநகர்ப் பெருவுடை யவனே!

---

1 1. சைகளை உடையா உடையவன்—திகம்பரன்; 2. கந்து-கட்டுத்தறி; 3. வந்து—காற்று; பஞ்சபூதங்களும் கூறியுளது.

15. உன்னை யின்கின்றி ஒருவரை நாயேன்
உரையினில் உளத்தினில் செயலிற்
பன்னிடேன் கருதேன் பணிந்திடேன் என்றும்
பரமனே! திரிபுராந் தகனே;
கன்னியோர் பாக முடையனே! கங்கை
கவின்சடை முடித்தமுக் கணனே!
என்னையோர் பொருளா ஆண்டருள்; தஞ்சை
[2]எந்தையாய்! பெருவுடை யவனே!

16. கோவலூர் குடந்தை திருக்குட வாயில்
கோலக்கா கொடுமுடி கோயில்
நாவலூர் நாகை நனிபள்ளி கானூர்
நன்னிலம் நாரையூர் கூடல்

[1]மூவலூர் சேறை ஆப்பனூர் காழி
முதுகுன்ற மெனச்சொலி நாளும்
ஆவலூர் தாயான் போற்றிடப் பணியாய்;
அணிதஞ்சைப் பெருவுடை யவனே!

17. ஆலமே யனைய தீவினைக் கடையேன்
அஞ்செழுத் தன்புடனோதும்
சீலமே யில்லேன்; சிறப்பொன்று மில்லேன்;
திறப்படு சிந்தையும் இல்லேன்;
ஓலமே இட்டுன் உயர்பதம் பணிந்தேன்;
உறுகதி காட்டிநீ அருள்வாய்;
[2]பாலமே லொளிருங் கண்ணனே! தஞ்சைப்
பரமனே! பெருவுடை யவனே!

18. காயுமா புலனாற் கட்டுணுங் கடையேன்
கடலெனும் பவவினை அறவே
தேயுமா றுனது திருவடி பணிந்தேன்;
திருத்தனே! கருத்தனே! உறுத்துப்
பாயுமான் அங்கைப் பற்றிய பானே!
பையர வரைக்கசைத் தவனே!
தாயுமாய்த் தந்தை யாவுமாய் அருள்வாய்;
தஞ்சைவாழ் பெருவுடை யவனே!

---

1. தூசு — ஆடை; 2. எந்தையாய்—எந்தையானவனே!; ஆய்—தாயுமாம்.

19. நாடக அரங்காம் நானிலந் தன்னில்
நான்பல வினையினுற் பற்பல
வேடமே புனைந்து மிகமிக இளைத்தேன்;
வேண்டிலேன் மறுபிறப் பைய!
ஆடக அரங்கத் தாடிடும் அத்த!
அமையுமீ தெனக்கரத் தமர்த்தி
[3]வீடகம் அருளில் உய்குவேன்; தஞ்சை
வீறுடைப் பெருவுடை யவனே!

20. மண்ணிலெப் பிறவி வஞ்சனேன் உறினும்
வழுத்துநின் மலரடி எளியேன்
எண்ணிலெப் பொழுதும் இருக்குமா றருள்
இருக்குமா மறையறி கில்லா [வாய்;
அண்ணலே! ஆதி அந்தமே இல்லாய்!
அரியசெந் தமிழினிற் றவழும்
பண்ணனே! சோதீ! பரமனே! தஞ்சைப்
பதிவளர் பெருவுடை யவனே!

21. அதுஇது உதுவென் றியாவரும் அறியா
அப்பனே! ஒப்பிலா மணியே!
[1]விதுநதி முடியார் விமலனே! வேத
[2]வைத்தியா! வீணனேற் கருள்வாய்;
கதுமெனக் கருதும் அன்பர்தம் உளத்துக்
கனிதரு கருணைவா ரிதியே!
பதுமநற் பாதம் பணிந்தனன் தஞ்சை
பதியமர் பெருவுடை யவனே!

---

1. மூவலூர்—தேவார வைப்புத் தலம். ஏனைய பாடற்றலங்கள்;
2. பாலம்—நெற்றி. 3. வீடகம்—விடுதலை இடம். நாடக மூர்த்தியிடம் நடித்த இளைப்புக் கூறிய நயம் காண்க.

22. பந்தனை தீர்ந்து பவக்கடல் கடந்து
[3]பஞ்சவர் பாழ்விளை யாட்டை
நிந்தனை புரிய நினது வெண் ணீறு
நிதமுமென் மெய்யினிற் பூசச்
சிந்தனை யெனக்குன் சிந்தனையாகச்
செப்புவ னின்புக ழாக
வந்தெனக் கருள்வாய்; வளநகர்த் தஞ்சை
வரதனே! பெருவுடை யவனே!

23. செந்நெலும் கரும்பும் செழிப்புற ஓங்கும்
சென்னியர் நாடமர் சோதீ!
உன்னலுன் கழலே உவப்பதுன் செயலே
உவந்தனு தினமுமென் நாவாற்
பன்னலுன் புகழே யாம்படிக் கருள்வாய்;
பானுதண் மதிசுடர்க் கண்ணு!
என்னலும் இன்றும் நாளையு மாச்சீர்
நீள்தஞ்சைப் பெருவுடை யவனே!

24. மின்னிகர் வாழ்வை விரும்பியே நாயேன்
வேதனை பலபல அடைந்தே
உன்னிரு பாதம் ஓலமென் றடைந்தேன்;
உவந்தருள் புரிக; ஐங் கரத்தன்
பன்னிரு புயத்தன் இருவரைப் பயந்த
பருவரைக் கன்னியோர் பாகா!
பொன்னிநன் நாட்டிற் புகழ்மிகு தஞ்சைப்
புரிவளர் பெருவுடை யவனே!

---

1 சந்திரன்; 2 அறியத்தக்கவ! 3 பஞ்சவர்—ஐம்புலன்கள்.

25. சங்கிருப் புலையிற் காய்ந்தென வெளிய
சாம்பல்மெய் பூசிடும் சம்பூ!
அங்கியும் மழுவும் அங்கையில் ஏந்தி!
அடியனேன் பணிந்தனன் அருள்வாய்;
எங்கிருக்கின்றார் அடியவர் என்னும்
எண்ணமே கொண்டுநீ அவர்தம்
பங்கிருக் கின்றாய்; பரமனே! தஞ்சைப்
பதிதிகழ் பெருவுடை யவனே!

26. தஞ்சமுன் சரணம்; ஆண்டருள் தருவாய்;
தாணுவே! தமிழ்மொழிப் பண்பை
எஞ்சலில் சீர்த்திக் குறுமுனிக் கருளும்
எம்பிரான்! தமிழ்நலம் அறியா
மஞ்சனேன் அந்த மொழிநய முணரும்
வணம்அருள்; வானுயர் மாடத்
தஞ்சையில் இராஜ ராஜஈச் சரத்துத்
தழைத்தொளிர் பெருவுடை யவனே!

27. மரணஜென் மங்கள் மாற்றுபே ரின்ப
வழியெனக் கருளவே அத்தா!
சரணம்உன் சரணம் எனஉனை அடைந்தேன்;
சான்றபே ரடியவர்க் குதவும்
கருணையந் தருவே! கண்ணுத லரசே!
கணுவிலாக் காமர்செங் கரும்பே!
அருணநன் னிறம்சேர் அண்ணலே தஞ்சை
அணிநகர்ப் பெருவுடை யவனே!

28. வஞ்சியோர் பாலை மகிழ்பவ! அவுண
மாமுதல் முருக்குசேய்க் குருந்தை
அஞ்சுவெவ் வினைநீக் கத்தியை ஈந்த
அரச! ஆல் தேக்கடிக் குரவ!
பிஞ்சுவெண் பிறைச்செஞ் சடாடவிப் பெரும!
பிழைக்குமா றுன்பதம் பணிந்தேன்;
விஞ்சையர் சூழும் இஞ்சிசூழ் தஞ்சை
விழைந்தருள் பெருவுடை யவனே!

29. போற்றிசங் கரனே போற்றியெம் அரனே!
போற்றிவெண் பிறையணி பரனே!
போற்றிமால் வேதன் போந்தறி வொண்ணாப்
புகலடி முடியுடை யவனே!
போற்றிவெவ் அவுணர் முப்புரம் எரித்த
புன்னகை; போற்றி எஞ்ஞான்றும்
போற்றிநின் அலகில் திருவருள்; தஞ்சைப்
புனிதனே! பெருவுடை யவனே!

30. போற்றிமுக் கணனே! போற்றிஅங் கணனே!
போற்றிஎ ழுலகுமெண் குணனே!
போற்றிவேற் கரனே! புரமெரி அரனே!
போற்றிவெள் விடையிவர் பரனே!
போற்றிநான் மறையும் புகழொணாச் சிவனே!
போற்றிஆல் அடியுறை தவனே!
போற்றிநின் பதமாம் புதுமலர்; தஞ்சைப்
புரிவரு பெருவுடை யவனே!

கவி 27-ல் தரு அரசு கரும்பு எனவும், 28-ல் வஞ்சி பாலை மகிழ் மா முருக்கு குருந்து அத்தி ஈந்து அரசு ஆல் தேக்கு நாவம் என 12 மரப்பெயரும் அடவி எனக் காடும் தொனித்தல் காண்க.

9. காரைநகர்க் காங்கிரஸ் பிரமுகரும் கம்பன் கழகச் செயலாளருமாகிய சா. கணேசன் செட்டியார்:- பிள்ளைத்தமிழ் நல்ல கருத்துக்கள் செறிந்த பாக்களைத் தன்னகத்தே பெற்று, நன்னிற மலர் நறுமணமும் கொண்டதெனப் பொலிகிறது. அம்புலியும் சிறுதேரும் வாய்ப்பாக விளங்குகின்றன.

10. சென்னை திவான்பகதூர் K.S. ராமஸ்வாமி சாஸ்திரியார் முன்னை ஜில்லா ஜட்ஜ்:- The Poem contains valuable ideas in flowing and charming verse.

11. மதுரை A. வைத்யநாத ஐயர், B.A., M.L.A.- The ideas and the diction are excellent and very appealing'

நால்வர் பிள்ளைத்தமிழ்.

சைவப் பெருந்தகையாளர்
உயர்திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T., அவர்கள்
முன்னுரையாக வரைந்த மதிப்புரையிற் கூறுவதாவது :—

1. பாடசாலைப் பரீட்சாதிகாரியாயிருந்து ஓய்வு பெற்றுள்ள திராவிடக் கவிமணி, திரு. வே. முத்துசாமி ஐயர் M.A., L.T, அவர்கள் சிவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நாட்டு நலப்பற்றும் இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்தன. நால்வர் சரித நிகழ்ச்சிக் குறிப்புகளும் மொழிக்கு மொழி தித்திக்கும் அவர்தம் திருவாக்குப் பகுதிகளும் இந்நூலின் செய்யுட்கள் பலவற்றிலும் செறிந்துள்ளன. இவை கற்பார்க்குப் பெருங்களிப்பூட்ட வல்லன.

கவிமணி உயர்திரு. S. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் :—

2. பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் எளிய இனிய தமிழில் அழகாக அமைந்துள்ளன. பருவத்துக்கொரு பாட்டு வீதம் பாடியிருப்பது இக்காலத்துக்கேற்ற முறையே. செல்வன் கோதண்டராமன் கவித்திறம் பாடல்களில் நன்றாக விளங்குகிறது

நாமக்கல் கவிஞர் உயர்திரு. V. இராமலிங்கம்பிள்ளை அவர்கள்:—

'3. நால்வர் பிள்ளைத்தமிழ் மிகவும் மெச்சத்தக்க முறையில் அமைந்துள்ளது. நண்பர்கள் பலர் இதைப்படித்துப் பாராட்டினார்கள். இன்னும் சிலர் படிக்கஎடுத்துப்போயிருக்கிறார்கள். தங்கள் குமாரருக்கு என் வாழ்த்துக்கள்.

இராவ்பகதூர் தணிகை மணி, உயர்திரு. V. S. செங்கல்வராய பிள்ளை M.A. அவர்கள் முகவுரையிற் கூறுவதாவது :—

4., இப்பிள்ளைத்தமிழை யாத்தற்குக் காரணபூதராயிருந்த திராவிடக் கவிமணி பிரமஸ்ரீ வே. முத்துசாமி ஐயர், M.A., L.T அவர்கள் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் முன்னிலையில். இப்பிள்ளைத்தமிழ்களைப் படித்துக்காட்டி, நூலாசிரியர் நால்வருக்கும், அவர்கள்பால், தங்கக்காசும் ஆசியும்பெற்றனர்.

இந் நூலாசிரியர் இயற்றிய வேறுநூல்கள்

1. நால்வர் பிள்ளைத்தமிழ் அணா ... 4
2. தஞ்சைப் பெருவுடையார் மாலை (அச்சில்) 30 துதிகள் சென்னை இராவ்பகதூர் தணிகைமணி, உயர்திரு. V.S. செங்கல்வராய பிள்ளை M. A., புதுவைக் கவிராஜ பண்டிதர் N. கனகராஜ ஐயர் B.O.L. சிறப்புப்பாயிரங்கள் கொண்டது. ... 4

இந் நூலாசிரியரின் தந்தையார் இயற்றிய நூல்கள்.

1. தொல்காப்பியம் பொருள் அதிகார ஆராய்ச்சி; பி. ஏ. மாணவர்களுக்குப் பாடமானது அணா 6
2. தனிப்பாக்கோவை; சந்தர்ப்பமும் குறிப்பும் கொண்டது 8
3. பத்மினி—சரித்திர இயைபு பெற்ற ஓர் உண்மைத் தமிழ்க் கதை, இண்டர் மாணவர்களுக்குப் பாடமானது 12
4. மாயூர நாதர் அந்தாதி; குறிப்புக்களுடன் ... 4
5. விநாயகர் துதிப்பாக்கோவை - பல விநாயகர் துதிகள் 62 பாடல்கள் கொண்டது; குறிப்புக்களுடன் 4
6. முருகன் துதிப்பாக் கோவை; ஆறு படை வீடுகளிலும் பிற தலங்களிலும் அமரும் குமரக்கடவுள் மீது பாடிய 108 கவிகள் கொண்டது; குறிப்புக்களுடன் ...
7. ஆசிரியர் துதிப்பாக் கோவை; பிர்மஸ்ரீ மஹாமஹோபா யாய டாக்டர் சாமிநாதய்யர் அவர்கள்மீதும், பிரகிருத ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் (காமகோடி பீடம்) மீதும்; 250 பாடல்கள் கொண்டது ...
8. சங்கர சற்குரு ஆற்றுப்படையும் அன்பு விடுதூதும் ...
9 ஆதி சங்கரர் மீது பாதுகை நூற்றெட்டு ..
10. கதையும் பாட்டும் இரண்டு பாகங்கள்; பால பாடசாலைகளுக்கேற்றவை; தனித்தனி ..
11. இராமாநுஜன் பிள்ளைத்தமிழ்; கணிதக் கலைப் பெரும் புலவர் இராமாநுஜம் F.R.S. மீது பாடியது கலைமகள் ஆசிரியர்பிர்மஸ்ரீ கி. வா. ஜகந்நாதய்யர் B.O.L அவர்கள் சாற்றுக்கவி கொண்டது; குறிப்புகளுடன் ... 4

வே. முத்துசாமி அய்யர் எம். ஏ., எல். டி.,
திராவிடக் கவிமணி, அரங்கநாதபுரம்,
திருக்காட்டுப்பள்ளி போஸ்டு.